2003 ஏப்ரல் 11]

வினா எண் 248, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

248—

மாணவர் விடுதிகள்

***3709—திரு. கா.பூ. முனுசாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதிகளில் மாணவர் சேர்க்கையைப் பொருளாதார அடிப்படையில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிகளில் மாணவர் சேர்க்கை பொருளாதார அடிப்படையில்தான் செயல்படுத்தப்படுகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தின் அடிப்படையில்தான் சேர்க்கப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எந்த அளவிற்குத் தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதே நேரத்தில் பிற்படுத்தப்பட்ட சமூகங்களிலேயும்கூட வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற, அதாவது ஆண்டு ஒன்றுக்கு 12,000 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் வரக்கூடிய குடும்பங்களிலிருந்து வருகின்ற குழந்தைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் விடுதிகளில் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தின் அடிப்படையில் சேர்க்கப்படும் என்று சொன்னேன். 50,000 ரூபாய் ஆண்டு வருமானத்திற்குக் கீழ் உள்ளவர்கள்தான் இந்த பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியிலே சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அதேபோல்,

உறுப்பினர் கேட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு அந்த அடிப்படையிலே முன்னுரிமை வரும் என்று நம்புகிறேன். ரூபாய் 50,000 ஆண்டு வருமானத்திற்குக் கீழ் உள்ளவர்கள் எல்லாம் சேர்க்கப்படுவார்கள் என்றால் அதிலே இந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் எல்லாம் வந்து விடுகிறார்கள். இருந்தாலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்துதான், அதிலே மாணவர்கள் வருகின்ற தூரத்தையும் அவர்கள் பயிலுகின்ற கல்வியின் தரத்தையும் அனுசரித்து, அதன் அடிப்படையிலே இடம் வழங்கப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலை அளித்தார்கள். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் 50,000 ரூபாய் ஆண்டு வருமானம் என்பதால் ஓரளவுக்கு வசதி படைத்தவர்கள் வந்துவிடுகிறார்கள். நான் இங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்க விரும்புவது, வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருப்பவர்கள், பிற்படுத்தப்பட்டோர் சமூகத்தில் கிட்டத்தட்ட 80 விழுக்காடு இருக்கிறார்கள். அந்த 80 விழுக்காடுக்குள் உள்ள குடும்பங்களிலிருந்து வருகின்ற குழந்தைகளுக்கு முன்னுரிமை அடிப்படை என்று சொன்னால் அதிலே வருகின்ற மனுக்களை பரிசீலனை செய்து இப்பொழுது 40 இடங்கள் என்று வருகின்றபொழுது அந்த 40 இடங்களுக்கு, 50 இடங்களுக்கு மனு பெற்று 40 இடங்களுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே வருகின்ற மாணவர்கள் இருந்தால், அவர்களுக்கே கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருக்கும்பொழுது 1993-லே ரூபாய் 15,000தான் ஆண்டு வருமானமாக வைத்திருந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை உயர்த்தி அந்த ஆண்டு வருமானத்தை ரூபாய் 50,000 ஆக ஆக்கிவிட்டார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த below poverty line என்று சொல்கின்ற அந்த நிலையில் உள்ளவர்களுக்கு, ஓரளவு முன்னுரிமை கொடுத்து

எப்படிச் செய்வது என்பதை மாண்புமிகு அம்மா அவர்களைக் கலந்து இந்த அரசு சிந்திக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 249, திரு. ப. அரசன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

249—

கூட்டுறவு நூற்பாலை

•23414—திரு. ப. அரசன்:

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் சம்பள உயர்வு குறித்த பேச்சுவார்த்தையைத் தொடங்கும் எண்ணம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் சம்பள உயர்வு குறித்துப் பேசுவதற்கு தொழில் தகராறு எதுவும் எழுப்பப்படவில்லை. தொழிலாளர் நலத் துறையை அணுகவும் இல்லை. அரசிடம் இது தொடர்பான எந்தப் பிரச்னையும் நிலுவையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் உதவி ஆணையர் அவர்கள் 4-3-2003 அன்று புதுக்கோட்டை மாவட்ட நூற்பாலையினுடைய தனி அலுவலருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்.

அந்தக் கடிதத்தில் 11-12-1998 ஆம் தேதிய இருதரப்பு ஒப்பந்தத்தில் ஏற்கெனவே நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளவாறு 1-1-2000 முதல் தொழிலாளர்களுக்கு பிற கூட்டுறவு நூற்பாலைகளிலே கொடுக்கப்படும் சம்பளத்தை வழங்குமாறு நிர்வாகம் கேட்டுக்கொள்ளப்படுகிறது என்று